ஆடுகளுக்காக அழும் ஓநாய்கள்!

தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்... முதல் பக்கத் தொடர்ச்சி

இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் சதித்திட்டத்தினை எதிர்த்து சட்ட நகல் எரிப்பு போராட்டத்தை1986ஆம் ஆண்டில் நம் உயிர்நிகர் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தபோது, முன்கள வீரனாக மொழிப் போர்க்களம் கண்டவன்தான் உங்களில் ஒருவனான நான். அப்போது, கோவையில் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில், மொழிப் போர்த் தியாகிகளின் படங்களைத் திறந்து வைத்து உரையாற்றுகின்ற வாய்ப்பினை இளைஞரணிச் செயலாளரான எனக்கு வழங்கினார், தமிழுக்காக வாழ்ந்தவரும்தமிழாகவே வாழ்ந்தவருமான நம் தலைவர் கலைஞர்.

“கிரேக்கத்தை எப்படியாவது கைப்பற்றி விடவேண்டும் என்று கருதி பாரசீக ஏகாதிபத்தியம் ஒரு பெரும் படையெடுப்பை நடத்தியது. எல்லையிலே ஒரு சிறு கிரேக்கப் படையின் வீரர்கள் அதனை எதிர்கொண்டு வீரமரணம் அடைகிறார்கள். அவர்களின் உடல் வீழ்ந்து கிடந்த இடத்திலே ஒரு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது. அதில்,

‘இவ்வழிச் செல்லும் மக்காள்நீவீர் ஸ்பார்ட்டா சென்று பகர்வீர் - நாங்கள் பணியை முடித்துப் படுத்தோம்’

- என்ற வாசகம் எழுதப்பட்டிருந்தது. நாட்டைக் காக்கும் போரில் தங்கள் உயிரைக் கொடுத்த அன்றைய கிரேக்க வீரர்களுக்கு கழகத் தொண்டர்களாகிய நாம் சளைத்தவர்களல்ல” என்று குறிப்பிட்டேன்.

> **சிறை கண்ட நம் உயிர் நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு,கைதிகளுக்கான கட்டம் போட்ட சட்டையையும், அரைக்கால் சட்டையையும் அணிவித்து அவரது கையில் தட்டும் குவளையும் வழங்கினார்கள் அன்றைய ஆட்சியாளர்கள்.**

ஹிட்லர் ஆட்சியில் ஜெர்மன் மொழி திணிக்கப்பட்டதை எதிர்த்து செக்கோஸ்லோவியா என்ற நாடு உருவானதையும், ஆங்கில மொழித் திணிப்பை எதிர்த்து அயர்லாந்து மக்கள் நடத்திய தீரமிகு போராட்டத்தையும், பங்களாதேஷ் எனும் நாடு உருவானதற்கு காரணம் பாகிஸ்தான் அரசின் மொழித் திணிப்பே என்பதையும், இலங்கையில் சிங்கள மொழி ஆதிக்கம்தான் அங்குள்ள தமிழர்களைத் தனி நாடு கேட்டுப் போராட வைத்திருக்கிறது என்பதையும் அந்த உரையிலே எடுத்துரைத்து, **“அரசியல் சட்டத்தினுடைய 17ஆம் பாகத்தில் ஒரு பிரிவை ஒரு தாளில் எழுதிக் கொளுத்துகின்ற போராட்டத்தை நம் தலைவர் அறிவித்திருக்கிறார். அப்படிப்பட்ட போராட்டத்தில் கொளுத்துகின்ற அந்தத் தீ, இன்றைக்கு இந்தித் திணிப்பை நடத்திக் கொண்டிருக்கிற மோசடிக்காரர்களின் எண்ணங்களுக்கு நாம் வைக்கிற எழுச்சி தீ”** என முழங்கினேன்.

சொன்னதைச் செய்யும் இயக்கமான திராவிட முன்னேற்றக் கழகம் 1986 இல் இந்தித் திணிப்புக்கு எதிராக அரசியல் சட்ட நகல் எரிப்பு போராட்டத்தைத் தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடத்தியது. மாநிலமெங்கும் தீ பரவியது. அந்தப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றேன். ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகள் தாய் மொழி காத்திட சிறை புகுந்தனர். இனமானப் பேராசிரியர் பெருந்தகை உள்ளிட்ட கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர்கள் பத்து பேரின் பதவியைப் பறித்தார் அ.தி.மு.க அரசின் அன்றைய பேரவைத் தலைவர். **“மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச் சாலை”** என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வரிகளை நீதிமன்றத்தில் வாக்கு மூலமாக அளித்து, சிறை கண்ட நம் உயிர் நிகர் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞருக்கு,கைதிகளுக்கான கட்டம் போட்ட சட்டையையும், அரைக்கால் சட்டையையும் அணிவித்து அவரது கையில் தட்டும் குவளையும் வழங்கினார்கள் அன்றைய ஆட்சியாளர்கள். தமிழே உயிரெனக் கொண்ட நம் தலைவர் சிறைக் கொடுமைகளை சிரித்தபடியே எதிர்கொண்டார்.

பதவி பறிக்கப்பட்டாலும், சிறையில் அடைத்து சித்திரவதை செய்தாலும், உயிரையே கொடுக்க வேண்டியிருந்தாலும் ஆதிக்க மொழித் திணிப்புக்கு இடந்தராமல் ஆரூயிரானத் தமிழைக் காப்போம் என்பதில் அப்போதும் இப்போதும் உறுதியாக இருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

இந்திதான் இந்தியாவின் தேசிய மொழி என்றும், சமஸ்கிருதமே இந்தியாவின் முதன்மை மொழி என்றும் சொல்லி இரண்டையும் திணிக்க நினைக்கிறார்கள். அவர்கள் சொல்கின்ற இரண்டுமே வடிகட்டிய பொய் என்பதை வரலாறு சொல்கிறது.

(தொடரும்)

அன்புடன்
மு.க. ஸ்டாலின்

திருவள்ளுவர் ஆண்டு 2056
மாசி 18
02.03.2025

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிராக அமெரிக்காவில் போராட்டம்!

அமெரிக்க வாழ் தமிழர்கள் பதாகைகளை ஏந்தி எதிர்ப்பு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, மார்ச் 3 -

ஒன்றிய அரசின் இந்தித் திணிப்புக்கு எதிராக, அமெரிக்காவிலும் போராட்டம் வெடித்துள்ளதாக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை மற்றும் இந்தித் திணிப்பை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்பினர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் இந்தி திணிப்பை எதிர்த்து அமெரிக்காவிலும் போராட்டம் வெடித்துள்ளது.

அமெரிக்காவின் டல்லாஸ் நகரில் அமெரிக்கா வாழ் தமிழர்கள் ஒன்று கூடி இந்தித் திணிப்புக்கு எதிராக முழக்கங்களை எழுப்பியும், பதாகைகளை ஏந்தியும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர்.

அப்போது, ஒன்றிய அரசுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.

இதனிடையே, அமெரிக்க வாழ் தமிழர்களின் போராட்டத்தை சுட்டிக் காட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், மும்மொழி கொள்கை திணிப்பை எதிர்த்து அமெரிக்காவின் டல்லாஸ் நகரில் அமெரிக்க வாழ் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் தமிழ் வாழ்க என்றும் கூறியுள்ளார்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் குறிப் பிட்டுள்ளார்.

தமிழ்நாடு அரசு முதன் முதலாக மார்ச் 14-ல்

பொருளாதார அறிக்கை தாக்கல் செய்கிறது!

சென்னை, மார்ச் 3 -

தமிழ்நாடு அரசு முதன் முதலாக பொருளாதார ஆய்வறிக்கையை மார்ச் 14 ஆம் தேதி சமர்ப்பிக்கிறது.

தமிழ்நாடு அரசின் பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் 14 ஆம் தேதி தொடங்குகிறது.

நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அன்றைய தினமே, 2025 26 ஆம் நிதியாண் டிற்கான நிதி நிலை அறிக்கையை சட்டப் பேரவையில் தாக்கல் செய்கிறார்.

இந்நிலையில், தமிழ் நாடு அரசு முதன் முதலாக பொருளாதார ஆய்வறிக்கையையும் மார்ச் 14 ஆம் தேதி சமர்ப்பிக்கிறது. தமிழ்நாடு அரசு இது போன்ற பொருளாதார ஆய்வு அறிக்கையை முதன்முதலாக தாக்கல் செய்ய உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

கன்னியாகுமரி மேற்கு மாவட்ட திமுக அயலக அணி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களது பிறந்தநாள் விழா மாவட்டச் செயலாளர் மனோதங்கராஜ் எம்.எல்.ஏ. வழிகாட்டுதல்படி மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தி.மு.க. அயலக அணி மாவட்ட அமைப்பாளர் பாலூர் தேவா தலைமையில் கிள்ளியூர் தெற்கு ஒன்றிய துணை செயலாளர் துரைராஜ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஜெனோ ரினிட்டஸ் மற்றும் அயலக அணி துணை அமைப்பாளர்கள் முன்னிலையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் உரிமைகளை பாதுகாப்பதற்கான உறுதிமொழி ஏற்கப்பட்டது.

தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் இரா.ஆவுடையப்பன் ஆலோசனைப்படி திருக்குறுங்குடி பேரூர் திமுக மாவட்ட பிரதிநிதி கே. எஸ்.முத்துராஜ் ஏற்பாட்டில் நம்பி தலைவன் பட்டயம் ஆர்.சி. துவக்கப்பள்ளி மற்றும் பாலர் பள்ளி மாணவ,மாணவியர்களுக்கு இனிப்புகள்.எவர்சில்வர் தட்டுக்கள், தேர்வு எழுதும் அட்டைகள் வழங்கி கொண்டாடப்பட்டது. உடன் 3வது வார்டு திமுக செயலாளர் மு வெள்ளப்பாண்டியன், விவசாய அணி , டி.முத்து குமார். இ, அண்ணாதுரை, என்.கணேசன். மாணவர் அணி ரமேஷ், ராஜா மற்றும் உடன்பிறப்புக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாகையில் கள ஆய்வில் முதல்வர்!

நாகை மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொள்வதற்காக சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (2.3.2025) பல்வேறு நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதைத் தொடர்ந்து இன்று (3.3.2025) கழக நிர்வாகிகள் கூட்டத்தில் பங்கேற்கிறார்.

மயிலம் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு 500 நபர்களுக்குநலத்திட்ட உதவிகள்!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மைலம், மார்ச் 3 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மயிலம் வடக்கு ஒன்றிய திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி தீவனூரில் நடைபெற்றது.

மயிலம் ஒன்றிய பெருந் தலைவர் யோகேஸ் வரி மணிமாறன் தலைமையில் மயிலம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணிமாறன் ஏற்பாட்டில் நடைபெற்றநிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு கழக இருவண்ண கொடியினை ஏற்றி வைத்து அவரது தலைமையில் இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் தாய் மொழி தமிழ் மொழியைஎன்றும் காப்போம் தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்,என்ற உறுதி மொழியை தி.மு.க. நிர்வாகிகள் பொதுமக்கள் ஏற்றனர்.

இதைத்தொடர்ந்து விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, மாவட்ட அவை தலைவர் டாக்டர் சேகர், மாவட்ட பொருளாளர் ரமணன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், ஒன்றிய நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், திமுக நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா மத்திய ஒன்றியம் புளியங்கன்னு பகுதியில் கழக தலைவர் – தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கேக் வெட்டிக் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கி ஒரே இலக்கு: தமிழ்நாடு போராடும்; தமிழ்நாடு வெல்லும்! என்னும் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணை செயலாளர் ஆர்.வினோத்காந்தி தெங்கால் டி.சி.பத்மநாபன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா.சிவஞானம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் .தியாகராஜன், ஒன்றிய துணை செயலாளர் கோமதி விஜியகுமார், ஒப்பந்ததாரர் வடிவேலு, மணியம் பட்டு ஜான் ஜெயபால், பெல் பாண்டியன், சி.சுப்பிரமணி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தொன்போஸ்கோ, மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சிவா மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.